**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**

**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ம் நாள்**

**அசல் வழக்கு எண்.40/2025**

[CNR.No.TNDG190000932025]

செல்லமுத்து .... வாதி

// எதிராக //

1. M.செல்லாத்தாள்

2. M.அழகர் நாச்சிமுத்து .... பிரதிவாதிகள்

(இ.ம.எண்.03/2025 என்ற எண்ணில் கடந்த 01.11.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி வழக்குரையில் முதன்முதலாக திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது)

இவ்வழக்கு கடந்த 19.02.2025ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 26.02.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 23.03.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.A.பூர்ணச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 26.03.2025ஆம் தேதியும், 2ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 16.10.2025ம் தேதியிலும் ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், வழக்குரை, சான்றாவணங்கள், வழக்கு கோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

**1.** இவ்வழக்கானது ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் :**

தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான முத்துச்சாமியின் தந்தை கருப்பணகவுண்டருக்கு கடந்த 15.07.1977ம் தேதி ஒட்டன்சத்திரம் சார்பதிவக ஆவண எண்.618/1977 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள பாகப்பிரிவினை ஆவணத்தின் வழியாக C பாகமாக கிடைக்கப்பெற்று, அனுபவித்து வந்து, தாவா சொத்தை முத்துச்சாமி விற்பனை செய்ய முன்வந்ததன் அடிப்படையில், வாதியும், முத்துச்சாமியும் தாவா சொத்துக்களை ரூ.7,00,000/- தொகைக்கு கிரையம் பேசி, கிரைய முன்பணமாக ரூ.5,00,000/- தொகையை வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு, பாக்கி கிரையத்தொகை ரூ.2,00,000/-தொகையை 08.09.2021 முதல் 07.03.2022 வரையிலான ஆறுமாத காலக்கெடுவிற்குள் பெற்றுக்கொண்டு தாவா சொத்தினை வாதிக்கு கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் கடந்த 08.09.2021ம் தேதி கிரைய உடன்படிக்கை பத்திரம் எழுதிக்கொள்ளப்பட்டுள்ளது. வாதி கிரைய ஒப்பந்த சரத்துக்களின்படி காலக்கெடு முடியும் தருவாயில் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான முத்துச்சாமியை நேரில் அணுகி தாவா சொத்தினை கிரையம் செய்து பெற்றுக்கொள்ள தயாராகவும், விருப்பமாகவும் இருப்பதாக தெரிவித்தும், கிரைய ஒப்பந்தம் காலாவதியாகும் நாள் வரை கிரையம் செய்து கொடுக்காமல் காலம் கடத்தி வந்து, 1, 2 பிரதிவாதிகளை வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டார். கிரைய ஒப்பந்த சரத்துக்களின்படி வாதி தாவா சொத்தினை கிரையம் செய்து கொடுக்குமாறு நேரிலும் ஆட்கள் வழியாக கேட்டும் கிரையம் செய்து கொடுக்காமல் காலம் கடத்தி வந்ததால், வாதி தனது வழக்கறிஞர் வழியாக கடந்த 16.02.2024ம் ஆம் தேதி கிரைய ஒப்பந்த சரத்துக்களின்படி பாக்கி கிரைய தொகை ரூ.2,00,000/- தொகையை பெற்றுக்கொண்டு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியதை, கடந்த 18.12.2024ம் தேதி பெற்றுக்கொண்டும், பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை. வாதிக்கு தாவா சொத்துக்களை கிரையம் பதிந்து கொடுக்கவில்லை. எனவே, தாவா கிரைய உடன்படிக்கை பத்திரத்தின் சரத்துக்களின்படி ஏற்றதை ஆற்றுக பரிகாரமும் மாற்றுப்பரிகாரமாக கடந்த 08.09.2021ம் தேதியிட்ட கிரையஒப்பந்த பத்திரத்தின்படி

வாதி செலுத்திய கிரைய முன்தொகை ரூ.2,00,000/— தொகையை வட்டியுடன் செலுத்தக்கோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்தும், கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள பிச்சைராஜா என்பவர் வா.சா.2 ஆக விசாரித்தும், வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி வழக்குரையில் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

**5. பிரச்சனைக்கான தீர்வுகள்:**

**5.1.** தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான முத்துச்சாமியின் தந்தை கருப்பணகவுண்டருக்கு கடந்த 15.07.1977ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின் வழியாக C பாகமாக கிடைக்கப்பெற்று, அனுபவித்து வந்து, அவர் இறந்த பின்னர் வாரிசுரிமைப்படி முத்துச்சாமி என்பவருக்கு கிடைக்கப்பெற்று, தாவா சொத்தை விற்பனை செய்ய முன்வந்ததையடுத்து, வாதியும், முத்துச்சாமியும் தாவா சொத்துக்களை ரூ.7,00,000/— தொகைக்கு கிரையம் பேசி, கிரைய முன்பணமாக ரூ.5,00,000/— தொகையை வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு, பாக்கி கிரையத்தொகையை ஒப்பந்த தேதியிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் செலுத்தி கிரையத்தை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என சரத்து கண்டு கள்ளிமந்தையம் சார்பதிவக ஆவண எண்.992/2022 என்ற ஆவணத்தின் தன்மைப்படி வாதிக்கும், முத்துச்சாமி என்பவருக்கும் இடையே பதிவு செய்த கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டிருப்பது வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது.

**5.2.** வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே தாவா சொத்தை விற்பனை செய்வதற்காக கள்ளிமந்தையம் சார்பதிவக ஆவண எண்.992/2022 என்ற ஆவணத்தின் தன்மைப்படி பதிவு செய்த கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டுள்ள

நிலையில், ஒப்பந்த  சரத்துக்களின்படி பாக்கி கிரையத்தொகையை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுக்க முத்துச்சாமி கடமைபட்டவர் ஆவார்.  ஆனால், இவ்வழக்கை பொறுத்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான முத்துச்சாமி என்பவர் கடந்த 03.06.2022 ஆம் தேதி இறந்துள்ளார் என்பது வா.சா.ஆ.5 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது. இறந்துபோன முத்துச்சாமியின் வாரிசுகளான இவ்வழக்கு பிரதிவாதிகள் வழக்கு நடவடிக்கையில் முன்னிலையாகாத காரணத்தினால், கடந்த ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

**5.3.** வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரப்படி, பிரதிவாதிகள் சொத்தினை கிரையம் செய்து கொடுக்காத காரணத்தினால், வாதி பாக்கி கிரைய தொகையை பிரதிவாதிகளிடம் செலுத்தி வழக்கு சொத்துக்களை கிரையம் முடித்துக்கொள்ள தயாராகவும், விருப்பமாகவும் இருந்து வருவதை தெரிவித்து, 1ம் பிரதிவாதிக்கு கடந்த 16.12.2024ம் ஆம் தேதி வழக்குரைஞர் வழியாக அறிவிப்பு அனுப்பியிருப்பது வா.சா.ஆ.3 ஆவணத்தின் வழியாகவும், மேற்படி அறிவிப்பை 1ம் பிரதிவாதி கடந்த 18.12.2024ம் தேதி பெற்றுக்கொண்டிருப்பது வா.சா.ஆ.4 ஆவணத்தின் வழியாகவும், 2ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் தவிர்த்துள்ளது வா.சா.ஆ.2 ஆவணத்தின் வழியாகவும் அறிய முடிகிறது.

**5.4.** வாதிக்கும், இறந்து போன முத்துச்சாமிக்கும் இடையே பதிவு செய்த கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டுள்ள நிலையில், மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் முதலாவது சாட்சியாக கையெழுத்து செய்துள்ள வா.சா.2 பிச்சைராஜா என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 08.09.2021ம் தேதியில் வாதிக்கும், 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான முத்துச்சாமி என்பவருக்கும் இடையே தாவா சொத்தை பொறுத்து ரூ.7,00,000/−தொகைக்கு கிரையம் பேசப்பட்டு, முன்பணமாக ரூ.5,00,000/− முன்பணமாக பெற்றுக்கொண்டு, கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டதாகவும், ஒப்பந்த பத்திரத்தில் வா.சா.2 என்பவர் முதலாவதாக சாட்சி கையெழுத்து செய்துள்ளதாகவும், சொல்லியுள்ள சாட்சியம் ஏற்புடைய சாட்சியமாக உள்ளது.

**5.5.** தாவா சொத்தை வாதிக்கு விற்பனை செய்வதாக வாதிக்கும், இறந்து போன முத்துச்சாமி என்பவருக்கும் இடையே பதிவு செய்த கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டுள்ள நிலையில், கிரைய ஒப்பந்த சரத்துக்களின்படி பாக்கி கிரையத்தொகையை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுக்க பிரதிவாதிகள் கடமைபட்டவர்கள் ஆவார்கள். ஆனால் இவ்வழக்கைப் பொறுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய 08.09.2021ம் தேதியில் சுவாதீன மாற்றம் இல்லாத கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேசமயம், தாவா சொத்திற்கான மூலஆவணம் வாதி வசம் உள்ளதா? அல்லது பிரதிவாதிகள் வசம் உள்ளதா? என்பதை பற்றி எந்தவித சரத்துக்களும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிடவில்லை. தொகை ரூ.5,00,000/−த்தை முன்பணமாக ஒப்பந்த தேதியான கடந்த 08.09.2021ம் தேதி இறந்துபோன முத்துச்சாமி பெற்றுள்ள நிலையில், வாதி மீதிபாக்கி கிரையத்தொகை ரூ.2,00,000/− தொகையை முத்துச்சாமிக்கு செலுத்த வேண்டும் என்பது வா.சா.ஆ.1 ஆவணத்திலிருந்து அறிய முடிகிறது. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் காலக்கெடுவானது 07.03.2022ம் தேதிக்குள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தொகை ரூ.5,00,000/− தொகையை ஒரே தவணையாக முன்பணமாக செலுத்த தகுதியுள்ள வாதி மீதமுள்ள பாக்கி கிரையத் தொகை ரூ.2,00,000/−தொகைக்கு கிரைய ஒப்பந்த தேதியிலிருந்து ஆறு மாதம் காலக்கெடு நிர்ணயம் செய்துள்ள நிலையில், நிர்ணயிக்கப்பட்ட அதிகப்படியான காலக்கெடுவிற்கான காரணத்தை வாதி தரப்பில் முன்வைக்கவில்லை. சொத்தினை கிரையம் பெறும்நோக்கத்தில் ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிக்கு இருந்தும், வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை. எனவே, வாதி கோரியுள்ள வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வாதிக்கு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**5.6.** 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான முத்துச்சாமி என்பவர் வாதியிடம் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தொகை ரூ.5,00,000/− பெற்றுள்ளதை வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்கள் வழியாகவும், வா.சா.ஆ.1 ஆவணத்தின்

வழியாகவும் அறிய முடிகிறது. எனவே, வாதியிடம் தொகை ரூ.5,00,000/− இறந்து போன முத்துச்சாமி என்பவர் பெற்றுக் கொண்டுள்ளது வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தின் வழியாகவும், வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியங்கள் வழியாகவும் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் தன்மைப்படி இவ்வழக்கு வாதி, இறந்துபோன முத்துச்சாமி என்பவருக்கு ரூ.5,00,000/−தொகை கொடுத்துள்ளார் என்பதை மட்டுமே கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது.

**5.7.** இவ்வழக்கை பொறுத்து வாதியிடம், 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான முத்துச்சாமி தொகை ரூ.5,00,000/− பெற்றுள்ள நிலையில், மேற்படி தொகையினை திருப்பிச்செலுத்தும் முன்பாக முத்துச்சாமி என்பவர் இறந்துவிட்டதால் இறந்துபோன முத்துச்சாமி விட்டுச்சென்ற அசையாச் சொத்துக்கள் வழியாக வாதிக்கு பிரதிவாதிகள் தொகை செலுத்த கடமைபட்டவர்கள் ஆவார்கள். வட்டி விகிதத்தைப்பற்றியோ அல்லது பணத்தினை திரும்ப பெறுவது பற்றியோ வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் எந்தவிதமான சரத்துக்களும் இடம்பெறவில்லை. இறந்து போன முத்துச்சாமி என்பவர் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வாதியிடம் தொகை ரூ.5,00,000/− பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

**5.8.** இவ்வழக்கு குறித்தவகை பரிகார சட்டம், 1963ன் கீழாக ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மாற்றுப்பரிகாரமாக வாதியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்றுள்ள தாவா கிரைய முன்பணம் ரூ.5,00,000/− தொகைக்கு கிரைய உடன்படிக்கை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை வட்டியுடன் சேர்த்து செலுத்தகோரி பரிகாரம் அசல் வழக்கில் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் வாதியிடமிருந்து, 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான இறந்து போன முத்துச்சாமி என்பவர் பெற்றுக்கொண்ட தொகைக்கு வட்டி விகிதம் பொறுத்து எவ்வித சரத்துக்களும் குறிப்பிடவில்லை. எனவே, வாதியிடமிருந்து, இறந்துபோன முத்துச்சாமி கிரைய ஒப்பந்த பத்திரம் வழியாக பெற்றுக்கொண்ட ரூ.5,00,000/− தொகைக்கு வட்டியை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் ஏற்றதை ஆற்றுகை

பரிகாரம் வழங்காமல் முன்பண தொகையினை பிரதிவாதிகள், வாதிக்கு வழங்க வேண்டும் என்று தீர்மானித்துள்ள நிலையில், நியாயமான வட்டியை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 34–ன் கீழாக, வட்டியை நிர்ணயம் செய்வதே சரியானதாக இருக்கும் என்பதால், ஒப்பந்த பத்திரத்தில் பணப்பரிவர்த்தனை ஏற்பட்ட 08.09.2021ஆம் தேதி முதல் முன்பணம் ரூ.5,00,000/–தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள்வரை ஆண்டொன்றுக்கு 9% சதவீதம் வட்டி வாதிக்கு, பிரதிவாதிகள் வழங்க வேண்டும் என்றும், தீர்ப்பாணை நாள் முதல் தொகை வசூலாகும் நாள் வரை முன்பணம் ரூ.5,00,000/– தொகைக்கு ஆண்டொன்றுக்கு 6% சதவீதம் வட்டியும், வாதிக்கு, இறந்து போன முத்துச்சாமி விட்டு சென்ற சொத்துக்கள் வழியாக பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**5.9.** வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ள நிலையில், இறந்துபோன முத்துச்சாமி விட்டுச்சென்ற அசையாச் சொத்துக்கள் வழியாக வாதிக்கு வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்திரங்களில் கண்டுள்ள தொகை ரூ.5,00,000/– தொகையும், பின்வட்டியும் பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டுள்ள நிலையில், வழக்கு சொத்தினை பிரதிவாதிகள் பராதீனம் செய்துவிட்டால், தொகையினை வசூல் செய்ய இயலாமல் போகக்கூடும். எனவே, வழக்கு சொத்தை பொறுத்து பொறுப்புறுதி பாத்தியம் ஏற்படுத்துவதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மேலும் பொறுப்புறுதி பாத்தியத்தை பொறுத்து உரிய கள்ளிமந்தையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இந்நீதிமன்றத்தின் வழியாக சொத்தின் மீது பொறுப்புறுதி பாத்தியம் ஏற்படுத்தி வைக்க தீர்ப்பாணையை கள்ளிமந்தையம் சார்பதிவாளருக்கு அனுப்ப உத்தரவிடுவதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. வாதியிடம், இறந்துபோன முத்துச்சாமி ரொக்கம் தொகை ரூ.5,00,000/– தொகையை பெற்றுள்ள நிலையில், அவரது வாரிசுகளான பிரதிவாதிகள் உரிய காலத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்தின் சரத்துக்களை நிறைவேற்றாத காரணத்தினால், வாதி நீதிமன்றத்தை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வாதிக்கு காலவிரையமும், பணவிரையமும் ஏற்பட்டுள்ள நிலையில், வழக்கின் செலவுதொகையை வாதிக்கு, பிரதிவாதிகள் வழங்க

உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

6. முடிவில்,

**1. இவ்வழக்கு செலவு தொகையுடன் பகுதியாக அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**2. தாவா சொத்தை பொறுத்து வாதி கோரிய ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வாதிக்கு வழங்க இயலாது என்று வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**3. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கண்டுள்ள அசல் தொகை ரூ.5,00,000/- தொகைக்கு 08.09.2021ம் தேதியிலிருந்து தீர்ப்பாணை நாளான 27.03.2026ஆம் நாள்வரை ஆண்டொன்றுக்கு 9% சதவீதம் வட்டியும், தீர்ப்பாணை நாள் முதல் தொகை வசூலாகும் நாள் வரை அசல் தொகை ரூ.5,00,000/- தொகைக்கு ஆண்டொன்றுக்கு 6% சதவீதம் வட்டியும், வாதிக்கு, இறந்துபோன முத்துச்சாமி என்பவர் விட்டுச்சென்ற அசையா சொத்துக்கள் வழியாக பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**4 வாதிக்கு, பிரதிவாதிகளால் தொகை செலுத்தப்படும் நாள் வரை வழக்கு சொத்தின் மீது பொறுப்புறுதி பாத்தியம் (சார்ஜ் பாத்தியம்) ஏற்படுத்தி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**5 வழக்கு சொத்தில் பொறுப்புறுதி பாத்தியம் பதிவு மேற்கொள்ள தீர்ப்பாணையின் நகல் கள்ளிமந்தையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்ப உத்தரவிடப்படுகிறது.**

**6 வழக்கின் செலவுதொகையினை வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.27 19:05:06 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**வாதி தரப்பு சாட்சிகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| வா.சா.1 | – | செல்லமுத்து | – | வாதி |
| வா.சா.2 | – | பிச்சைராஜா | – | சாட்சி |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | 08.09.2021 | வாதியும், இறந்து போன முத்துச்சாமி என்பவரும் ஏற்படுத்திக்கொண்ட பதிவு செய்யப்பட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் – அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 18.12.2024 | 2ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பட்ட கவர் – அசல் | வா.சா.ஆ.2 |
| 3 | 16.12.2024 | பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பு – அலுவலக நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | 18.12.2024 | 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை – அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | – | 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான முத்துச்சாமி என்பவரின் இறப்பு சான்று – நகல் | வா.சா.ஆ.5 |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி : இல்லை**
**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.**

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.03.27 19:05:12 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**